Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 64 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | டிசம்பர் 07, 2020

## 12 மணி நேரத்துள் யாழில் 193.2 மில்லிமீற்றர் மழை

யாழ்.மாவட்டத்தில் நேற்றய தினம் மாலை 2.30 தொடக்கம் இன்று அதிகாலை வரையில் 193.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்.பிராந்திய

யாழ்.மாவட்டத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியில் இருந்து இன்று அதிகாலைவரை 193.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாணம், பிராந்திய வளிமண்டல திணைக்கள பொறுப்பதிகாரி ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இன்று மாலை 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக பிராந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்வு கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# தவிசாளர் நிரோஷை கைது செய்ய பொலிஸ் தீவிரம்

### கைதைத் தடுக்க உத்தரவிடக் கோரும் எதிர்பார்க்கை பிணை விண்ணப்பம் புதன்கிழமை பரிசீலனைக்கு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோசை, பொலிஸார் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரும் எதிர்பார்க்கைப் பிணை விண்ணப்பத்தை நாளை மறுதினம் புதன்கிழமை பரிசீலனைக்கு ஒத்திவைத்த மல்லாகம் நீதிமன்றம், அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது.

இதேவேளை புதன் கிழமைக்கு முன்னர் தவிசாளரை கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தவிசாளர் தரப்பினர் தெரிவித்தனர்.

03



## சாவகச்சேரியில் 7 வீடுகளில் தொடர் புயல் கொள்ளை மூன்று பேர் கைது

“புரவி” புயல் தாக்கம் இடம்பெற்றபோது யாழ். சாவகச்சேரி - கல்வயல் மற்றும் மட்டுவில் பகுதிகளில் வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் மற்றும் அளவெட்டியை சேர்ந்த இருவர் யாழ்.குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சுமார் 03

## சாதாரண தரப் பரீட்சை மார்ச் 01 முதல் 14 வரை நடத்த கல்வி அமைச்சு திட்டம்

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ள கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சாதாரணதரப் பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 11 வரை நடைபெறும் என கூறினார்.

க.பொ.த. சாதாரண பரீட்சையை அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல் 27 வரை பரீட்சையை நடத்த முன்னர் முடிவு செய்யப்பட்டது.

03

## வடமாகாண வைத்தியசாலைகளுக்கு 101 மருத்துவர்கள் புதிதாக நியமனம்

வடக்கு மாகாண சபைக்கு உள்பட்ட வைத்தியசாலைகளுக்கு 101 மருத்துவர்கள் சுகாதார அமைச்சினால் இன்று நியமனம் வழங்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், 03

## தெல்லிப்பளை வைத்தியசாலையில் சுகாதாரச் சீர்கேடு நாளை அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

தெல்லிப்பளை வைத்தியசாலையில் மிகப்பெரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதை தெரியப்படுத்தியும் பொறுப்பு வாய்ந்தவர்கள் அதற்கு எந்த நடவடிக்கைகளையும் எடுக்காத காரணத்தால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக வைத்தியசாலை நிர்வாகம் எச்சரித்துள்ளது.

03

## வெள்ள அனர்த்தம் ஒரு இலட்சம் பேர் வடக்கில் பாதிப்பு

வடக்கு மாகாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் சுமார் ஒரு இலட்சம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3,576 குடும்பங்களை சேர்ந்த 11,938 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் 98 வீடுகள் முழுமையாகவும், 3,414 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரையில் 23 ஆயிரத்து 304 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 570 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார். அத்துடன் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர் 03

## யாழ்., கிளிநொச்சி பாடசாலைகள் நாளை முதல் வழமைக்கு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் நாளை இடம்பெறும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கோரோனா வைரஸ் அச்சம் காரணமாக நவம்பர் 24ஆம் திகதி மூடப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இரண்டு வாரங்களின் பின்னர் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் தீர்மானத்தின் பிரகாரம் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 23ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றன.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் கோரோனா 03



# 2030 வரை மீட்சியில்லை: கொரோனாவால் மோசமான வறுமை 100 கோடியைத் தொடும்

கொரோனா வைரஸின் நீண்டகாலப் பாதிப்பால் 2030ஆம் ஆண்டுக்குள் உலகில் வாழும் மக்களில் மேலும் 20.70 கோடி பேர் வறுமைக்குள் செல்வார்கள் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதன்மூலம், மோசமான வறுமை நிலைக்குத் தள்ளப்படுவோர் எண்ணிக்கை 100 கோடிக்கும் மேல் அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 10 ஆண்டுளில் கொரோனா வைரஸின் பன்முகப் பாதிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி கொரோனா பாதிப்பிலிருந்து மீள்வது ஆகியவை குறித்து ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் டென்வர் பல்கலைக் கழகம் மற்றும் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம் சார்பில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "சர்வதேச நிதியத்தின் கணக்கின்படி கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்பு உலகளவில் 4.40 கோடிக்கும் அதிகமான மக்கள் மோசமான வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள் என மதிப்பிட்டிருந்தது.

ஆனால், கொரோனா வைரஸ் பாதிப்புக்குப் பின்னர் கூடுதலாக உலகளவில் 20.70 கோடி மக்கள் மோசமான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள். அதிலும் பெண்கள் வறுமையில் வாழும் எண்ணிக்கை 10.20 கோடியாக அதிகரிக்கும்.

கொரோனாவினால் உண்டான பொருளாதார பிரச்சினைகளில் 80 வீத உற்பத்திப் பாதிப்பு 10 ஆண்டுகளுக்கு நீடிக்கும். இது கொரோனா வைரஸ் பாதிப்புக்கு முன்பிருந்த நிலையை எட்டுவதைத் தடுக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை முன்வைத்த முதலீடுகள், சமூக பாதுகாப்புத் திட்டம், நலத் திட்டங்கள், நிர்வாகம், டிஜிற்றல் மயமாக்கல், பசுமைப் பொருளாதாரம் போன்றவற்றாலும் மக்கள் மோசமான வறுமைக்குள் செல்வதைத் தடுக்க முடியாது.

ஆனால், இப்போதுள்ள கொரோனா பாதிப்பை கணக்கில் எடுத்து, நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் தொடர்ந்து கவனம் செலுத்தும்போது, 14.6 கோடி மக்களை மோசமான வறுமையிலிருந்து மீட்டு, பாலின வறுமைக்கான இடைவெளியையும் குறைக்க முடியும். பெண்கள் வறுமையில் வீழ்வதை 7.40 கோடியாகக் குறைக்க முடியும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுகுறித்து ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட நிர்வாகி அசிம் ஸ்டெய்னர் கூறுகையில் "வறுமை குறித்த இந்த புதிய ஆராய்ச்சியின் மூலம் உலகத் தலைவர்கள் எடுக்கும் முடிவுகள் உலகை மாறுபட்ட திசைகளில் கொண்டுசெல்ல முடியும்.

அடுத்த 10 ஆண்டுகளில் முதலீடுசெய்ய நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு கொரோனாவிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவுவது மட்டுமல்லாது வளர்ச்சிக்கான பாதையை மறுசீரமைக்கும். இந்த பூமி பசுமையான எதிர்காலத்தை நோக்கி நியாயமாகச் செல்ல வழிகாட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

---

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



கர்ப்பந்தரிப்பதற்கு முதல் ஆகக் குறைந்தது 3 மாதத்திற்கு முன்பிருந்தே போலிக்கமில மாத்திரைகள் உள்ளெடுக்க வேண்டும்.

போலிக்கமில குறைபாட்டினால் நரம்புத்தொகுதியின் வளர்ச்சி, விருத்தியில் பாதிப்பு ஏற்படும்.

திருமணமான உடனே உங்கள் பிரதேச குடும்ப நல உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு போலிக்கமில மாத்திரைகளை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்தியகலாநிதி**
**கோ.றஜீவ்**

---

# மேல் மாகாணம் முழுமையாக முடக்கப்படுமா?

பண்டிகை காலங்களில் மேல் மாகாணம் முழுமையாக முடக்கப்படாது ஆனால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை நோயாளிகள் அடையாளம் காணப்படும் பகுதிகள் தனிமைப் படுத்தப்படும் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் குறித்து கொழும்பில் உள்ள மக்கள் அச்சமடையத் தேவையில்லை என குறிப்பிட்டுள்ள இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிலைமை கட்டுப்பாட்டில் இல்லை என்றாலும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதே எப்போதும் நல்லது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண்டிகை காலத்திற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அடுத்த வாரம் நிலைமை மீளாய்வு செய்யப்படும் என்றும் தேவையின்றி ஒன்று கூடுவதை தடுக்க மேலதிக சுகாதார வழிகாட்டுதல்களை அமுல்படுத்த வேண்டுமா என்பது குறித்து இதன்போது விவாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நோயாளிகள் இருக்கும் இடங்களையும் மக்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக வசிக்கும் இடங்களிலும் கொரோனா தொற்று மேலும் பரவுவதைத் தடுக்க அந்த பகுதிகளை உடனடியாக தனிமைப்படுத்துவோம் என்றும் இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

முழு பொலிஸ் பகுதிகளையும் முழுமையாக முடக்குவதை விட, அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளை தனிமைப்படுத்த அதிகாரிகள் இப்போது முடிவு செய்துள்ளனர்.

அடுத்த வாரத்திற்குள் நோயாளிகளின் எண்ணிக்கை குறையும் என்றும் மாத இறுதிக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் என்றும் சுகாதார அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இருப்பினும் இது பொதுமக்களின் கைகளில் இருப்பதாக தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள், நோயாளிகளை அடையாளம் காண நாடு முழுவதும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

---

# கொரோனா உயிரிழப்புகளின் எண்ணிக்கை 140ஆக அதிகரிப்பு



கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 140ஆக அதிகரித்துள்ளது.

கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 98 வயதான ஆணொருவர் கொவிட் 19 தொற்றுக்குள்ளானவர் என இனங்காணப்பட்ட பின்னர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த டிசம்பர் மாதம் 06ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் தொற்று நிமோனியா நிலையாகும்.

காஹதுட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதான ஆணொருவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் டிசம்பர் மாதம் 05ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானதுடன் சிறுநீரக செயலிழப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கோன பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதான ஆணொருவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றுடன் நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 27ஆயிரத்து 877ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று 370 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இதனையடுத்து, கொரோனா தொற்றில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 460 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தொற்றுக்கு உள்ளான ஏழாயிரத்து 273 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# மினுவங்கொட கொரோனா கொத்தணிக்கு உக்ரேன் நாட்டவர்களே காரணம்

மினுவங்கொட ஆடை தொழிற்சாலை கொரோனா கொத்தணி உருவாகுவதற்கு உக்ரேன் நாட்டவர்களே காரணம் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று (திங்கட்கிழமை) கருத்து வெளியிட்ட அவர், இது தொடரர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , "மினுவங்கொட கொத்தணி உருவான பிரன்டிக்ஸ் நிறுவன தொழிலாளர்களுக்கு இந்தநோய் பரவிய விதம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெறுகின்றது.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபர்களிடம் இருந்தே இந்த வைரஸ் பரவியிருக்கலாம் என தெரியவந்துள்ளது.

அதன் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கும் போது சீதுவ ரமாதா ஹோட்டலில் தங்கியிருந்த உக்ரேன் நாட்டு விமான பணியாளர்களுக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அந்த ஹோட்டலின் பணியாளர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது அங்குள்ள பலருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களுக்கும் மினுவங்கொட ஆடை தொழிற்சாலை ஊழியர்களுக்கும் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த விதத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய மினுவங்கொட பிரின்டிக்ஸ் நிறுவன ஊழியர்களுக்கு மேற்குறிப்பிட்ட விதத்தின் ஊடாக வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என யூகிக்க முடியும்.

பேராசிரியர் நீலிக்க பலவெக்கே வைரஸ் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வின் போது இப்போது நாட்டில் பரவி வரும் வைரஸானது இதற்கு முன்னர் நாட்டில் பரவிய கொரோனா வைரஸ் வகையை சேர்ந்தவையல்லவென தெரிவித்தார்.

இப்போது பரவும் வைரஸானது ஐரோப்பிய நாடுகளில் பரவும் வைரஸுக்கு இணையானது என அவர் தெரிவித்தத்தில் இருந்து மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு இது சாட்சியாக அமைகின்றது" என கூறினார்.

# மேலும் 10 வைத்தியசாலைகளில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள அனுமதி

நாட்டில் உள்ள மேலும் 10 வைத்தியசாலைகளில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் இரசாயனகூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய 5 அரச வைத்தியசாலைகள் மற்றும் 5 தனியார் வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை 20 ஆயிரமாக அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமன் ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தெல்லிப்பளை...

வைத்திய சாலை நிர்வாகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையானது யாழ்மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வைத்திய சாலையாகவும், வடமாகாணத்தில் மூன்றாவது பெரிய வைத்தியசாலையாகவும், புற்று நோய்சிகிச்சை, உள நல சிகிச்சை ஆகிய சிறப்புப் பிரிவுகளை உள்ளடக்கி ஊழியர்களின் அற்பணிப்பான சேவையினால் வடமாகாண மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றி வருகின்றது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களாகிய நாம் எமது வைத்தியசாலையில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு வைத்தியசாலை நிர்வாகத்திடமும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திடமும் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அவை எவையும் இன்றுவரை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

01. எமது வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களுக்குத் தேவையான அளவு முகக்கவசங்கள் (N95), முகப்பாதுகாப்புக் கவசம் (Face Shield), தனிப்பட்ட பாதுகாப்பு அங்கி (PPE) என்பன வழங்கப்படவில்லை.

வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, வைத்தியசாலை விடுதிகள் என்பவற்றில் பணிபுரியும் வைத்தியர்கள் பலவிதமான நோயாளர்களையும் கையாள்வதனால் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுக்கும் அபாயத்தில் உள்ளார்கள்.

02. எமது வெளி நோயாளர் பிரிவில் போதுமான அளவு இடவசதி இன்மையால் சன நெருக்கடி ஏற்படுகிறது. நோயாளரை பார்வையிடும் பகுதி மற்றும் நோயாளரை அனுமதிக்கும் பகுதி (Admission Room) என்பவற்றை தனித்தனியாக பிரித்துத் தருமாறு கோரிக்கை விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

03. தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனவே எமது வைத்தியசாலையில் ஒரு அதிதீவிர சிகிச்சைப்பிரிவு ( ICU) மற்றும் தீவிர சிகிச்சைப்பிரிவு ( HDU ) என்பவற்றை ஆரம்பிக்க வேண்டிய உடனடித் தேவை உள்ளது.

இதற்கு நிரந்தரமான உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் (Consultant Anaesthetist) ஒருவர் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார். தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கென நியமிக்கப்பட்ட உணர்வழியியல் சிகிச்சை நிபுணருக்கு பதிலாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஒரு உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டிருந்தும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்குரிய உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் விடுவிக்கப்படவில்லை.

04. வவுனியா கல்வி வலய பணிமனையில் ஏற்பட்ட நிதி முறைகேட்டை காரணம் காட்டி எமது வைத்தியசாலை வைத்தியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதில் தேவையற்ற விதத்தில் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. இச் செயற்பாடானது யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கணக்காளரினதும், வடமாகாண நிதி செயலாளரினதும் நிதி முகாமைத்துவத்தில் ஏற்பட்ட பின்னடைவே காரணமாகும்.

05. எமது வைத்தியசாலையில் பணிபுரியும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்களுக்குச் சரியான விடுதி வசதிகள் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் வைத்தியசாலை நிர்வாகத்தினாலும், பிராந்திய சுகாதார பணிமனை நிர்வாகத்தினாலும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. இதனால் சில வைத்தியர்கள் தங்கள் வேலையை இராஜினாமா செய்தும் சென்றுள்ளார்கள்.

06. வடமாகாணத்தில் உள்ள கொரோனா வைத்தியசாலைகள் உட்பட யாழ்மாவட்ட வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகள் மற்றும் புற்றுநோய் மருந்துக் கழிவுகள் அனைத்தும் தெல்லிப்பளை வைத்தியசாலையிலேயே எரியூட்டப்படுகின்றன. ஆனால் இங்கு எரியூட்டும் இயந்திரம் சரியான முறையில் இயங்காதபடியால் மருத்துவக் கழிவுகள் குறைதகனம் அடைந்து அதன்மூலம் தெல்லிப்பளை வைத்தியசாலை நோயாளர்கள், ஊழியர்கள் மற்றும் அருகாமையில் வசிப்பவர்கள் அனைவரும் மிகப்பெரிய சுகாதாரச் சீர்கேட்டுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அத்துடன் வைத்தியசாலைக் கழிவுக்கிடங்கிலிருந்து உரியமுறையில் கழிவுகள் அகற்றப்படாமையினால் தற்போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக வைத்தியசாலையிலும் வைத்தியசாலையை சூழ்ந்த பகுதியிலும் வெள்ளத்தினூடாகப் பரவி சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை சரியான காலத்தில் சரியான முறையில் தீர்ப்பதற்கு நிர்வாகத்தினரும் சம்பந்தப்பட்டவர்களும் ஒத்துழைப்புத் தராத பட்சத்தில் நாம் எமது கோரிக்கைகளை வலியுறுத்தி 08.12.2020 அன்று அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெள்ள அனர்த்தம்...

எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் கடுமையான காற்று மற்றும் வெள்ளத்தால் 93 வீடுகள் முழுமையாகவும், 2,969 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

2008ஆம் ஆண்டு நிஷா புயலால் ஏற்பட்ட தாக்கத்தின் பின்னர் தற்போது வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் சூரியராஜ் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 358 குடும்பங்களைச் சேர்ந்த 1,340 பேர் 21 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையால கிளிநொச்சி மாவட்டத்தில் 1,926 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 668 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 703 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 151 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 784 பேரும், வவுனியா மாவட்டத்தில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

### தவிசாளர்...

"கடந்த சில நாள்களுக்கு முன்பாக யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான ஊரெழு அம்மன் கோவில் வீதியை சீரமைக்கவுள்ளதாக அடிக்கல்லினை நட்டு வைத்தனர். இவ் வீதியை சீரமைக்க முகவராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்டவர்களின் ஒளிப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டு திட்டப்பெயர்ப்பலகை நடப்பட்டது.

குறித்த பெயர்ப்பலகையை நட அனுமதி பெறப்படாததால் அதனை அகற்றுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடிதம் (தொலைநகல் வாயிலாகவும்) அனுப்பப்பட்டது. ஒருகடமை நாள் சென்ற பின்னரும் அவர்கள் அகற்றாத நிலையில் பிரதேச சபை ஒன்றிற்குச் சொந்தமான வீதியை மத்திய அரசு நிறுவனமாக இருந்தால் என்ன எந்த நிறுவனமாக இருந்தால் என்ன எக் காரணம் கொண்டும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் சீரமைக்க முடியாது. அதனால் அதனை தவிசாளர் அகற்றியிருந்தார்.

குறித்த பெயர் பலகை அஅகற்றியது மூலம், அரச சொத்துக்கு சேதம் விளைவித்தார் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் கடந்த வெள்ளி, சனிக்கிழமை தவிசாளரிடம் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் இன்றைய தினம் பொலிஸார் தவிசாளரை கைது செய்வதற்கான நடவடிக்கையை எடுத்த வேளை, தவிசாளர், பொலிஸார் தன்னை கைது செய்வதனை தவிர்க்கும் முகமாக எதிர்பார்க்கை பிணை (முன் பிணை) விண்ணப்பத்தினை மல்லாகம் நீதிமன்றில் தனது சட்டத்தரணி ஊடாக தாக்கல் செய்தார்.

குறித்த விண்ணப்பம் எதிர்வரும் புதன் கிழமை பரிசீலனைக்காக எடுக்கப்படும் என மன்று திகதியிட்டுள்ளது.

அன்றைய தினம் அச்சுவேலி பொலிஸாரை மன்றில் முன்னிலையாகுமாறும் மன்று பணித்துள்ளது.

இந்நிலையில் புதன் கிழமைக்கு முன்னதாக தவிசாளரை கைது செய்வதற்கு பொலிஸார் கடும் பிராயத்தனங்களை முன்னெடுத்து உள்ளதாகவும், இன்றைய தினமே சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக பிரதேச சபையில் பொலிஸார் காத்திருந்ததாகவும், தற்போதும் தவிசாளரின் வீடு, பிரதேச சபை உள்ளிட்ட இடங்களில் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் நடமாடி வருவதாகவும் அதனால் அச்சுறுத்தல் காரணமாக தவிசாளர் பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்கியுள்ளார் என தவிசாளர் தரப்பினர் தெரிவித்தனர்.

### யாழ்., கிளிநொச்சி...

வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் சுகாதாரத் துறையின் ஆலோசனைக்கு அமைய அந்த மாவட்டப் பாடசாலைகள் நவம்பர் 24ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டன.

வடமாகாணத்தில் கடந்த டிசெம்பர் 2ஆம் திகதி ஏற்பட்ட புரேவி புயல் காரணமாக நவம்பர் 3, 4ஆம் திகதிகளில் மாகாண பாடசாலைகள் அனைத்துக்கும் ஆளுநரின் அறிவிப்புக்கு அமைய விடுமுறை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த இரண்டு தினங்கள் அதிகளவு மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ளத்தினால் இன்று திங்கட்கிழமையும் இரண்டு மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கல்வி அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் பாடசாலைகள் நாளை இடம்பெறும் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அவர் கேட்டுள்ளார்.

### சாவகச்சேரியில்...

7 பவுண் நகைகள் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம், 2 கிராம் ஹெரோயின், 3 மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவும் பொலிஸாரினால் மீட்கப்பட்டிருக்கின்றது. கடந்த 2ம் திகதி இரவு புரவி புயல் தாக்கம் இடம்பெற்றபோது கல்வயல் மற்றும் மட்டுவில் பகுதியில் அடுத்தடுத்து 7 வீடுகளை உடைத்து

5 பேர் கொண்ட கும்பலினால் தொடர் கொள்ளை சம்பவம் இடம்பெற்றிருந்தது. குறித்த கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் 3 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் பிரிவு மேற்கொண்டிருந்த துரித விசாரணைகளின் அடிப்படையில் அளவெட்டி மற்றும் சுன்னாகம் பகுதிகளை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில்

திருட்டு நகைகளை வாங்கிய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். மேலும் கொள்ளையர்களிடமிருந்து சுமார் 7 பவுண் நகை, 30 ஆயிரம் பணம், 2 கிராம் ஹெரோயின், 3 மோட்டார் சைக்கிள் ஆகியன மீட்கப்பட்டுள்ள நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### வட மாகாண...

மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் 27 மருத்துவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும் 20 மருத்துவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த அனைத்து மாவட்ட, ஆதார மற்றும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு இவ்வாறு 101 மருத்துவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நியமனம் அமைந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் ஒருதொகுதி மருத்துவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

### சாதாரண தரப்...

இருப்பினும் கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டின் நிலைமையையும் மாணவர்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டும் ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 23,304 குடும்பங்களைச் சேர்ந்த 75,570 பேர் பாதிப்பு

யாழில் தொடர்ச்சியாக நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 23,304 குடும்பங்களைச் சேர்ந்த 75,570 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 ம் ஆண்டு நிஷா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தின் பின்னர் தற்போது வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக யாழ். மாவட்டத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, “கடந்த சில தினங்களாக ஏற்பட்ட தாழமுக்கத்தினை தொடர்ந்து ஏற்பட்ட புரவி புயல் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் யாழ்.மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.



புரெவி சூறாவளி தாக்கம் மற்றும் தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை23,304 குடும்பங்களைச் சேர்ந்த 75,570 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

மேலும், குறித்த சீரற்ற காலநிலையின் தாக்கத்தின்காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதோடு, ஆறுபேர் காயம் அடைந்துள்ளார்கள்

சீரற்ற காலநிலையின் காரணமாக இதுவரை 94 வீடுகள் முழுமையாக சேதம் அடைந்துள்ளது. 3024 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சிறு மற்றும் மத்திய முயற்சியாளர்கள் 776 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 27 வகையான உட்கட்டமைப்பு வசதிகளும் சேதமடைந்துள்ளன.

தற்போது 21 இடைத்தங்கல் முகாம்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டியில் திடீரென அதிகளவான குரங்குகள் உயிரிழப்பு!

கண்டி- உடவத்தகெலே வனவிலங்கு பூங்காவில் கடந்த சில நாட்களாக திடீரென அதிகளவான குரங்குகள் உயிரிழந்தன.

இந்நிலையில் குறித்த குரங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஏதோ ஒரு வகையான விஷம் உடலில் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



மேலும், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே குரங்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதில் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

ஆனால், ஒருவகையான விஷம் உடலில் பரவியுள்ளமையினால் குரங்குகள் உயிரிழந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை பீட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.



# ஆந்திராவில் மர்ம நோய்: 292 பேருக்கு திடீரென உடல்நல பாதிப்பு! ஒருவர் உயிரிழப்பு!!

ஆந்திராவின் எலுரு என்ற நகரின் பல இடங்களில் வசித்த 292 பேர் வரை மர்ம நோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் அவர்களில் ஒருவர் மரணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனைவருக்கும் மயக்கம், தலைசுற்றல், வாந்தி, நடுக்கம், குமட்டல், கீழே விழுதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


அவர்கள் அனைவரும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் அல்ல எனவும், பொதுவான எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கவில்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, முதியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் இதுவரை 140 பேர் வீடு திரும்பியுள்ளதாகவுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்து நிபுணர் குழுவினர் எலுரு பகுதியில் முகாமிட்டுள்ளதுடன் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் எந்தப் பிரச்சினையும் கண்டறியப்படவில்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்த ஆந்திர சுகாதாரத்துறை அமைச்சர் அலநானி, உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள யாருக்கும் கொரோனோ தொற்று இல்லை எனவும் மக்கள் அச்சப்படத் தேவையில்லையன்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எலுரு பகுதியில் குடிநீரில் இரசாயன வேதிப்பொருள் நிறைந்த மாசுபட்ட நீர் கலந்திருக்கலாம் எனவும் அதனைக் குடித்ததால்தான் மக்களுக்கு இவ்வாறான பாதிப்பு ஏற்பாடிருக்கலாம் என்றும் முதற்கட்டத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், இவ்விவகாரம் குறித்து மருத்துவர் குழு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றது.



# நேற்று மட்டும் 648 பேருக்கு கொரோனா

நாட்டில் நேற்று மட்டும் 648 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப்பட்டவர்களில் 451 பேர் சிறைச்சாலைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், என்றும் ஏனைய 197 பேரும் பேலியகொட கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 27ஆயிரத்து 876ஆக அதிகரித்துள்ளது.

இன்னும் ஏழாயிரத்து 273 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# ஏப்ரல்-21 தாக்குதல்: 90 வீத விசாரணை நிறைவு!

ஏப்ரல்-21 பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான 90 வீத பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கோட்டை - மாதிவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 37 பேருக்கு எதிராக மனிதக் கொலை சூழ்ச்சி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளதாகவும் ஏனையவர்களுக்கு பயங்கரவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இந்த நடவடிக்கைகளை சட்டமா அதிபர் விரைவுபடுத்தும் பட்சத்தில் குற்றவாளிகளை எம்மால் அடையாளங் கண்டுகொள்ள முடியும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆக பதிவு

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 17 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்களில் மூவர் ஏற்கனவே குணமடைந்து வீடு சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாவட்டத்தில் தற்போது கொவிட்ட 19 தொடர்பான நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்விடயத்தினை தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று புதிதாக ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருடன் மாவட்டத்தில் இதுவரை 17 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் ஏற்கனவே குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் கண்டறியப்பட்டவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவருடன் தொடர்புடையவர் என சுகாதார தரப்பு தெரிவிக்கின்றது.

அந்த வகையில் அவருடன் தொடர்புடையவர்களை அடையாளம் காணும் செயற்பாடுகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களையும் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கொவிட் தொற்று தொடர்பில் அவதானமாக செயற்பட்டு சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்” எனவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பொதுமக்களை கோரியுள்ளார்.